20th July 1964]

கனம் சபாநாயகர் : எல்லோரும் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தால்?

கனம் திரு. பூ. கக்கன் : மகாத்மா காந்தி அடிகளுக்கும் வேலப்பனுக்கும் உள்ள வித்தியாசம் தெரிந்திருக்கலாம். இறுதியாக, வேறு வழியில்லை என்று கடைசியில் உண்ணாவிரதம் ஆரம்பித்தார் காந்தி அடிகள். எடுத்ததற்கெல்லாம் உண்ணாவிரதம் என்றால் கட்டுக்கு அடங்காது. அதற்கு இடமேயில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இருந்து அவர் உண்ணாவிரதத்தை வாபஸ் பெற்ற பிறகு கோரிக்கையை அனுதாபத்தோடு கவனிக்கப் போவதாக அறிகிறேன். அந்த மட்டும் சந்தோஷம். கோரிக்கையை வைத்தவுடன் அரசாங்கத்திற்குத் தெரிவிக்காமல் எடுத்த எடுப்பில் பயமுறுத்தினாரா? போதுமான அவகாசம் கொடுத்தும் அரசாங்கம் பரிசீலனை செய்ய காலம் கழித்து வந்ததால் உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்தாரா?

கனம் திரு. பூ. கக்கன் : அதற்கு முன்பு அனுப்பிய மகஜர், விண்ணப்பங்கள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

Institute of Leather Technology

* 561 *Q.*—Sri V. S. S. MANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) how many students are passing every year from the Institute of Leather Technology in the City of Madras after completing their Diploma Course; and

(*b*) whether it is true that these students face with unemployment problem in this State?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) About 15 students each in Diploma in Leather Technology and Diploma in Leather Goods Manufacture.

(*b*) So far as the Diploma candidates in Leather Goods Manufacture are concerned there is some unemployment. But the training given in the Institute is intended to help candidates to become self-employed. However, efforts are being made to absorb the unemployed candidates in private and Government concerns including the Defence Department.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், லெதர் டெக்னாலஜி இன்ஸ்டிட்யூட்டில் கொடுக்கப்படுகின்ற பயிற்சியில் ஏராளமான மாணவர்கள் படித்து, தங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் ஓராண்டு இரண்டாண்டு செலவு செய்து இந்தப் பயிற்சியைப் பெறுகின்ற மாணவர்

[20th July 1964

களுக்கு இந்த மாநிலத்தில் வேலை கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும் அடுத்த மாநிலங்களிலாவது வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் இரண்டு விதமான டிரெயினிங் கொடுக்கப்படுகிறது. ஒன்று, "டிப்ளமோ இன் லெதர் டெக்னாலஜி". இன்னொன்று, "டிப்ளமோ இன் லெதர் குட்ஸ் மானிபாக்சர்". தோல் பண்டங்களை உற்பத்தி செய்கின்ற பயிற்சியில் படிக்கின்றவர்கள், இதைப் பயிற்சி முடிந்த பின்னால் தாங்களாகவே ஏதாவது தொழில் செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் தான் இந்தப் பயிற்சியில் சேரவேண்டும். இந்த அடிப்படையில் படிக்கின்றவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொல்வது சரியாகாது. தாங்களாகவே தொழில் செய்து கொள்வதற்குத் தகுந்த அளவில் தான் இந்தப் பயிற்சி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது தான் அரசாங்கத்தின் நோக்கம்.

புலவர் கா. கோவிந்தன் : தோலைக் கொண்டு தாங்களாகவே பொருட்களை உற்பத்தி செய்து கொள்வதற்குத் தகுந்த முறையில் கொடுக்கப்படுகின்ற பயிற்சிக்கு இந்த வருடமும் இடம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தாங்களாகவே வேலை செய்து கொள்ளலாம் என்று நினைக்கின்றவர்கள் தான் இந்தப் பயிற்சியில் சேரவேண்டும். அந்த நம்பிக்கை இல்லாதவர்கள் இந்தப் பயிற்சியில் சேரக்கூடாது என்பதைச் சர்க்கார் விளக்கமாகச் சொல்லியிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிலும், தோல் உற்பத்தித் தொழிலும் சென்னையில் அதிகமாக இருக்கின்றன. ஆகவே இந்தப் பயிற்சி பெற்று வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு செய்து கொடுக்கின்ற முறையில் அரசாங்கமே முன் வந்து, தோல் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலையை அமைக்க முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது சர்க்கார் சில லெதர் குட்ஸ் யூனிட்டுகளை வைத்திருக்கிறது. ஆனால் தனியார்த் துறையில் தான் இந்தத் தொழில் ஏராளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால் சர்க்கார் மேலும் அமைப்பதற்கு உத்தேசமில்லை.

Textile Mills

* 562 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the rationalisation talks between labour and managements covering the textile mills in Coimbatore region are over;

(*b*) if so, the details thereof;